## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பண்ருட்டி

## <u>முதலேற்பு வழக்கு எண்.84/2013</u>

பெயர் : வேணுநாதன்
த/பெயர்: கோபால்
நாள் : **23.09.2022**

**வா.சா. 1 .**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

பிரதிவாதிகள் இவ்வழக்கில் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்து கட்சியாடுகிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் முதல் அயிட்ட சொத்தின் அளவை தவறாக குறிப்பிட்டு விளம்புகை கோரியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் முதல் அயிட்ட சொத்தானது எனது தந்தை பாகப்பிரிவினையில் ஒதுக்கியதன் மூலம் எனக்கு பாத்தியம் என்றால் சரிதான். பாகப்பிரிவினையில் வழக்கில் முதல் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்தின் சக்குபந்தி விவரம் குறிப்பிட்டு எங்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பாகப்பிரினையில் 2 1/2 ஏர்ஸ நிலம் கூட்டாக உள்ள நிலையில் எனக்கு 1 ஏர்ஸ் நிலம் மட்டும் உரிமைகோரும் நிலையில் பாகப்பிரிவினை வழக்குதான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் மேற்படி 2 1/2 ஏர்ஸ் நிலத்தில் அவரவருக்கு பாத்தியமான நிலத்தை தனித்தனியாகத்தான் அனுபவித்து வருகிறோம். வழக்கின் 2வது அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் 34 செண்ட் ஆகும். 2வது அயிட்ட வழக்கு சொத்தை எனது அண்ணன் கிரையம் கொடுத்து பட்டா மாறுதல் ஆவணத்தில் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ள ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.9 ஆவணத்தில் முதல் பிரதிவாதி பட்டா மாறுதலுக்கு ஆட்சேபணையின்மை கொடுத்ததாக நான் சொல்லும் ஆவணம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 பாகப்பிரிவினை பத்திரத்தில் நான் 2வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். முதல் பிரதிவாதி நாகப்பன்

உயிருடன்தான் இருக்கிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 பாகப்பிரிவினை பத்திரத்தில் வழக்கு 2வது அயிட்ட சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டதாக குறிப்பு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நான் பிரமாண வாக்குமூலத்தில் முதல் பிரதிவாதி 2வது அயிட்ட வழக்கு சொத்தை வாய்மொழியாக கிரையம் கொடுத்ததால்தான் வா.சா.ஆ.7 பாகப்பிரிவினை பத்திரத்தில் 2வது அயிட்ட சொத்து காண்பிக்கப்படவில்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 பாகப்பிரிவினை பத்திரத்தில் 2வது அயிட்ட சொத்து காண்பிக்கப்படவில்லை என வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் 2வது அயிட்ட சொத்து பொருத்து எனது பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டபிறகுதான் வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.6, வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.18 வரையிலான ஆவணங்கள் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் முதல் பிரதிவாதி வாய்மொழியாக கிரையம் கொடுத்ததாக சொல்வது பொய் எனவும், 2வது அயிட்ட சொத்தை பிரதிவாதிகளிடம் இருந்து அபகரிக்க அவ்வாறு பொய்யாக கூறுகிறேன் எனவும் சொன்னால் சரியல்ல. முதல் பிரதிவாதிதான் 2வது அயிட்ட சொத்தை அனுபவித்து வருவதால் வா.சா.ஆ.7 பாகப்பிரிவினை பத்திரத்தின் 2வது அயிட்ட சொத்து காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நானும், முதல் பிரதிவாதியும் கூட்டாக சேர்ந்து 1 ஏக்கர் நிலம் வாங்கியதில் மோட்டார் சர்வீஸ் எனக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் இருந்ததால் மேற்படி மோட்டா சர்வீஸை முதல் பிரதிவாதி பெயருக்கு நான் பத்திர செலவுகளை ஏற்றுக்கொண்டு எழுதிக்கொடுத்ததால் முதல் பிரதிவாதி வா.சா.ஆ.8 கிரைய ஆவணத்தை எனக்கு எழுதிக்கொடுத்தார். நான் வழக்கிற்காக வா.சா.ஆ.8 கிரைய ஆவணம் ஏற்பட்டதை பொய்யாக கூறுகிறேன் எனவும், ஊர் மக்கள் முன்னிலையில் 2வது அயிட்ட வழக்கு சொத்தின் பட்டா என் பெயரில் உள்ளதை ரத்து செய்து எழுதித்தருவதற்கு ஈடாக வா.சா.ஆ.8 கிரைய ஆவணம் ஏற்பட்டது எனவும் சொன்னால் சரியல்ல. 2018ம் வருடம் ஏற்பட்ட பஞ்சாயத்தில் சிறுவத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் சுப்ரமணியன், ஏரிப்பாளையம் மொட்டைய படையாட்சி மகன் கலியபெருமாள், ஏரிப்பாளையம் ரங்கசாமி மகன் நரசன், நாராயணசாமி மகன் ரத்தினசாமி மற்றும் சுமார் 10 நபர்கள் இருந்தனர். இவ்வழக்கில் முதல் அயிட்ட சொத்தில் கண்ட மோட்டார் சர்வீஸ் வசதியில்லாமல் மேலும் என் பெயரில் 2 மோட்டார் சர்வீஸ் உள்ளது என்றால்

சரிதான். இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.260/2012ன் கீழ் பட்டா மாறுதல் செய்யக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் தாவாதான் மேற்படி அசல் வழக்கு எண்.260/2012ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட தாவா. பிரதிவாதிகள் அனைவரும் சங்கர், சிவக்கொழுந்து என்மீது மற்றும் எனது மகன் கோபிகிருஷ்ணன் மீது இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.83/2015 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கானது இவ்வழக்குடன் தொடர்புடையதல்ல. முதல் பிரதிவாதி 2வது அயிட்ட சொத்தை எனக்கு கிரையம் கொடுக்கவில்லை எனவும், 2வது அயிட்ட சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் எனவும் சொன்னால் சரியல்ல. 2வது அயிட்ட சொத்தை பொருத்து நான் வருவாய் ஆவணங்கள் ஏற்படுத்திக்கொண்டதால்தான் முதல் பிரதிவாதி வா.சா.ஆ.8 கிரைய ஆவணம் எழுதிகொடுத்தார் எனவும், ஆனால் அதற்கு பின்னிட்டும் நான் 2வது அயிட்ட சொத்து பொருத்து ஏற்படுத்திய வருவாய் ஆவணங்களை ரத்து செய்து கொடுக்கவில்லை எனவும் சொன்னால் சரியல்ல. நான் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்கு மூலம் ஏற்படவில்லை எனவும், அதனால் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடிக்குரியது எனவும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.